THIRU G. VASANTHA PAI: Sir, on a point of information. May I tell the Hon. Minister that my house is just opposite the Gandhinagar Boys' School and the other day, the persons working in my house brought their children to my house and kept them there for 15 to 20 minutes and then took them away. This information is wrong.

THE HON. THIRU K. ANBAZHAGAN: I would like to know whether the culprits brought the children to the house of the hon. Member or they were the parents of the children.

THIRU G. VASANTHA PAI: Sir, the labourers working in my house brought their children from the school at about 2 or 3 p.m. and kept them in the house, saying that there was a scare in the school and the pupils were asked to go away.

The Hon. THIRU K. ANBAZHAGAN: Sir, naturally a scare is created either by interested parties or by people who have no proper responsibility. Because of the scare, such things take place.

MR. CHAIRMAN: Culprits will never enter into the house of the hon. Member Thiru G. Vasantha Pai.

(2) மாணவிகள் பள்ளிகளிருக்கும் பகுதிகளில் மாணவர்கள் பள்ளிகளில் மாணவிகளைச் சேர்க்கக்கூடாதென்ற அரசு ஆணையால் ஏற்படவிருக்கும் திண்டாட்டம் குறித்து.

MR. CHAIRMAN: Thiru G. Swaminathan.

THIRU K. S. GANAPATHI: Mr. Chairman, Sir, on behalf of Thiru G. Swaminathan, I call the attention of the Hon. the Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, G.O. Ms. No. 1664, Education, dated 19th October 1972 according to which girls should not under any circumstances be admitted in Boys' Schools in areas where there are separate schools for girls and the consternation caused to thousands of parents and girl students in the State who may be put to difficulties because of the Government Order during the ensuing academic year.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 8-வது வகுப்பு வரை உள்ள எல்லாத் துவக்கப் பள்ளிகளும், மாணவரும், மாணவியரும் சேர்ந்து பயிலும் பள்ளிகளாகச் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கல்வி விதி 33-ன் படி, மாணவியருக்கென்று தனியே பெண்கள் உயர்நிலைப் பள்ளி இல்லாத இடங்களில் ஆண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகளில் மாணவியரை அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்துச் சேர்க்கலாம். ஆண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகளில் மாணவியர்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்தால், ஆசிரியைகள் அவர்களுக்கென்று வேலையில் அமர்த்தப்பட வேண்டும். பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட மாணவர்களைப் பெண்களுக்கான பள்ளிகளில் சேர்க்கக் கூடாது.

மாணவியர்களுக்கு என்று தனியே பள்ளிகள் இருக்கும் இடங்களில் மாணவியர்களை, ஆண்களுக்கான பள்ளிகளில் தகுந்த காரணங்களுக்கு ஆய்வு அலுவலர்களின் தனிப்பட்ட முன் ஒப்புதல் பெற்றுத்தான் சேர்க்க வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளின் ஏற்பிற்கு இதுவும் ஒரு நிபந்தனையாகும் என ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாணையின் நோக்கம் பின் வருமாறு :—

(அ) ஆண்களுக்கும், பெண்களுக்கும் உள்ள கல்வி நிறுவனங் களில் மாணவ, மாணவியர்களைச் சேர்ப்பதில் உள்ள போட்டியைத் தவிர்க்க வேண்டும் ;

(ஆ) வயது வந்த பெண்களை ஆண்கள் பள்ளியில் சேர்ப்பது நல்லது அல்ல.

(இ) பெண்களின் உடற் பயிற்சிக்கு ஆண்கள் பள்ளிகளில் வசதி இருக்க முடியாது.

இவ்வாணையினால் பள்ளி ஆய்வாளர்களின் முன் அனுமதியுடன் ஆண் களின் பள்ளிகளில் பெண்களைச் சேர்க்கலாம். இதனால் எந்த ஆசிரியரின் வேலைக்கும் பங்கம் வராது. இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது புது உத்திரவு அல்ல என்பதையும், ஏற்கனவே இருந்த ஆணை மீண்டும் வலியுறுத்தப்பட்டே உள்ளது என்பதையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால் இவ்வாணையை மறு பரிசீலனை செய்யக் கோரி விண்ணப்பங்கள் வந்துள்ளன. இவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

4. அரசினர் தீர்மானம்.

வேளாண்மைத் துறை கொள்கை விளக்க குறிப்பின்மீது விவாதம்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, "சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள வேளாண்மைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு@ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம் : "சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள 'வேளாண்மைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு' பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

@ 333-ஆம் பக்கங்களில் இணைப்பு IV-ஆக அச்சிடப்பட்டுள்ளது.